12th February 1958]

அது சரியாக இருந்தாலும் இருக்கும், தவருக இருந்தாலும் இருக்கும். ஆகவே இதைப்பற்றி நான் பதில் சொல்வதற்கு தயாராக இல்லே, சரியான பதில் இருந்தால் தான் பதில் சொல்லமுடியும்.

SRI M. K. SOMASUNDARAM : ப்ளாக் டெவலெப்மெண்ட் எரியாவுக்குள்ளே மடத்திற்குச் சொந்தமான இடங்களில் அபிவிருத்தி செய்ய முடியாது என்று ப்ளாக் டெவலெப்மெண்ட் ஆபீசர்கள் சொல்லுகிறார்கள். மடத்திற்குரிய இடத்தை அபிவிருத்தி செய்வதற்காக ப்ளாக் டெவலெப்மெண்ட் ஆபீசரிடம் மாற்றிக்கொடுக்க முடியுமா என்று கேட்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இதற்கு முன் சொன்ன பதில் இதற்கும் பொருந்தும்.

SRI A. VEDARATHNAM PILLAI : அரசாங்கம் எழு கோடி ரூபாய் செலவு செய்திருக்குமானுல், அதற்குத் தகுந்த அளவிலே கிராமவாசிகளின் பகுதியையும் ஓரளவு கொடுத்திருக்கவேண்டும். ஜில்லா போர்டுகளும் ஓரளவு அவர்கள் பகுதியைக் கொடுத்திருக்கவேண்டும். அந்தத் தொகை எவ்வளவு என்று கூற முடியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்தப் புள்ளி விவரங்கள் இப்பொழுது என் கையில் இல்லே.

* 52 Q.—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Chief Minister be pleased to state when a Community Development Programme will be started in the Chengam taluk? 8-40 a.m.

THE HON. SRI C. SUBRAMANIAM : It cannot categorically be stated now as to when exactly the Community Development Programme will be extended to this taluk; but it may be any time before the end of the Second Plan, according to the programme as at present phased.

Special Officer in the Agriculture Department

* 53 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether any Special Officer has been appointed to enquire into the working of the Agriculture Department for improving its machinery and the tractor organization; and

(b) if so, whether he has submitted his recommendations?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) Yes.

SRI N. K. PALANISAMI : அவர்கள் சமர்பித்த யாதாஸ்தின் விவரங்களேப்பற்றி கனம் மந்திரி அவர்கள் சொல்ல முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதிலே கண்ட சிபார்சுகள் இப்பொழுது பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன. பரிசீலனை செய்யப்பட்ட விஷயங்களில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டும் வருகிறது. பரிபூரணமாக முடிவு செய்ததும் கனம் அங்கத்தினர் அவர்கள் மறுபடியும் ஒரு கேள்வி கேட்டால், இதை முற்றிலும் இந்த டேபிளிலே வைக்கலாம்.